தலைப்பு 222 - இலங்கை தரைப்படை - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 222 - இலங்கை தரைப்படையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து இலங்கை தரைப்படையின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க இலங்கை தரைப்படையின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது இலங்கை தரைப்படையின் பொது திறைசேரியின் மற்றும் இல்ங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமானமற்ற பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வருமானமற்ற பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
தரைப்படை தனது 1,586 ஆளணியினர், 115 வாகனங்கள், 83,277 லீற்றர் எரிபொருள், 249,074 சதுர அடியான கட்டிடங்கள், 113 ஏக்கர் 02 ரூட்36 பேச்சஸ் மற்றும் ஏனைய 1,013 சொத்து விடயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய இராணுவப் படை வளங்களை பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பேணப்பட்டு வருகின்ற 18 தரைப்படை பண்ணைகள், 05 நலன்புரி ஹோட்டல்கள், உள்ளடங்கலாக பல்வேறு வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களின் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 1,357.6 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்தும் இந்த வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு வருமானம் உழைக்கும் பிரிவின் மூலம் அறிக்கையிடப்படுகின்ற வருமானம் முறைப்படியாக நிதிக்கூற்றுக்களில் ‘‘ஏனைய வருமானத் தலைப்பிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம்’’ என்பதாக காட்டப்பட்டுள்ளது.	திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற வருமானம் மாத்திரம் அல்லாது மேற்கூறிய செயற்திட்டங்களின் மூலம் உழைக்கின்ற ஒட்டுமொத்த வருமானமும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டில் எரிபொருள் செலவுகள் ரூபா 6,959.9 மில்லியனானதுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்து மேறகொள்ளப்பட்ட எரிபொருள் செலவு ரூபா 5,591.3 மில்லியன் ஆக இருந்ததனால் ரூபா 1,368.6 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து மீளாய்வாண்டில் 16,989,832 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு இணங்க அது 14,414,043 லீற்றர்களாக இருந்ததுடன் வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்திற்கு இணங்க மீளாய்வாண்டில் 13,704,653 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.	தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது சில தரைப் படை நிறுவனங்களின் விபரம் சமர்ப்பிக்காமை மற்றும் காசு அடிப்படையில், கொடுப்பனவு அடிப்படையில், மற்றும் செலவுத்தலைப்பு பரிமாற்ற அடிப்படையில் எரிபொருளினை வழங்கும் இணையவழி விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் வழங்கும் பெறுமதிக்கும் அளவு சார்ந்த புள்ளிவிபரங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசங்கள் இன்றி தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) மூலதனச் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	மீளாய்வாண்டில் ரூபா 1,220.53 மில்லியனான மூலதனச் சொத்துக்களை புனரமைத்தல், மேம்படுத்துதல், மற்றும் பெற்றுக்கொள்ளல் செலவுகள் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) ரூபா 136.77 மில்லியன் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதனச் செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

(ii)	கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 10 மூலதன விடயங்களின் முடிவுறாத வேலை மீதி ரூபா 177.90 மில்லியன் அதிகரித்து நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.	முடிவுற்ற/ முடிவுறாத வேலைகளை சரியாக அடையாளங்கண்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதனச் செலவுகளையும் முடிவுறாத வேலைகளையும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(iii)	முன்னைய ஆண்டுகளிலிருந்து தொடர்ச்சியான வேலைகளாக காணப்பட்ட நிர்மாண வேலைகள்/ திருத்த வேலைகளின் ஒரு பகுதியை உள்ளடக்கி மீளாய்வாண்டில் வேலைகளைப் பூர்த்திசெய்த பெறுமதி ரூபா 189.91 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் இப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.	உரிய பெறுமதி மூலதனமாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(i)	நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - 6) உள்ளடக்கப்பட்ட 29 வகையான சொத்துக்களின் கடந்த ஆண்டு இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக கொண்டு வரும் போது ரூபா 7,880.09 மில்லியன் குறைத்து முன்கொண்டு வரப்பட்டிருந்தது.	அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமதிகளை ஒப்பீடு செய்யாமைக்கான காரணம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.
(ii)	2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 7,116.06 மில்லியனான நடைமுறை வேலைகள் 24 நானாவித சொத்து விடயங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அப்பெறுமதி	எதிர்காலத்தில் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் உதவியினைப் பெற்று சரியான சொத்துக்கள் குறியீட்டின் கீழ் உள்ளடக்கப்படும்.	சரியான சொத்துக்கள் குறியீட்டின் கீழ் பெறுமதிகள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

	07 சொத்து விடயங்களின் கீழ் மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.		
(iii)	தரைப்படையினால் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தி வந்த நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள தரைப்படைக்குச் சொந்தமான 97 காணித்துண்டுகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுககப்படும்.	இக்காணிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டில் தரைப்படைக்கு பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பெற்ற ரூபா 15.95 மில்லியன் பெறுமதியான ஓடுவதற்குப் பொருத்தமற்ற 09 வாகனங்கள் நிதியற்ற சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	தற்பொழுது பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்ற இந்த வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	2019 நவம்பர் 08 ஆந் திகதியிலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்படுகின்ற 94,000 சதுர மீற்றரான படைத் தலைமையக கட்டிடங்களும், 2021 ஆம் ஆண்டில் ரூபா 101 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட Oracle கணனி மென்பொருட்களும், 2023 ஆம் ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டின் கமத்தொழில் மற்றும் கால்நடை வளரப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 50.20 மில்லியன் மூலதன விடயங்களை கொள்வனவு செய்தலும், 34 வாகனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 60.88 மில்லியன் மூலதனத தன்மையான பழுதுபார்த்தல் செலவுகளும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் மூலதனமாக்கப்படுதல் வேண்டும்.

(vi)	மீளாய்வாண்டில் முடிவுறாத வேலையாக மூலதனமாக்கப்பட வேண்டிய ரூபா 779,397 சொத்துக்கள் ஏனைய கட்டமைப்பின் (Other Structure) கீழும் ரூபா 2.01 மில்லியன் பெறுமதியான போக்குவரத்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாதும் உரிமையை உறுதிப்படுத்தாதும் அரசாங்கத்திடமிருந்தும் தனியார் துறையிடமிருந்தும் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 71.85 மில்லியன் பெறுமதியுள்ள 14 வாகனங்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது உரிய கணக்கு மீதிகள் சரிசெய்யப்படும் எனவும் உரிய வாகனங்களின் உரிமை தரைப்படைக்கு ஒப்படைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.	உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய சொத்துக்கள் மாத்திரம் சரியான குறியீட்டின் கீழ் மூலதனமாக்கப்படுதல் வேண்டும்.
(vii)	கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் (ஏசீஏ-6) மீளாய்வாண்டின் இறுதியில் முடிவுறாத வேலைகளின் மீதி ரூபா 828.36 மில்லியன் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.	துரிதமாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடக்கப்படும்.	சரியான பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(viii)	மீளாய்வாண்டில் தரைப்படையினால் கைதவிர்ப்புச் செய்வதற்கு முன்னர் ரூபா 44.32 மில்லியன் பெறுமதியான 51 வாகனங்கள் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் அந்த வாகனங்கள் 2025 சனவரி மாதத்தில் ரூபா 14.30 மில்லியனுக்கு விற்கப்பட்டிருந்தது.	கேள்விநடைமுறையில் உருவாகிய தாமதம் இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது.	சொத்துக்களை நீக்கும் போது ஆவணப்படுத்துதல் சரியாக செய்யப்படுதல் வேண்டும்.

(உ) முற்பணக் கணக்கு மீதி

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i) ஒரு தனியார் நிறுவனத்துடன் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி உருவாககிக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 10 ஆந் திகதி ரூபா 7.5 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அந்த முற்பணத்தில் ஆண்டின் போது உள்ளடக்கப்படாத திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்கொடுப்பனவாக செலுத்திய ரூபா 05 மில்லியன் பணம் இறுதி நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அப்பெறுமதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளின் மூலம் நாளதுவரையாக்கிய சரியான தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

தரைப்படையினால் நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் மாதாந்த வாகன சம்பவ குறிப்பு பத்திரம் மற்றும் எரிபொருள் செலவு செய்யும் அறிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ஆரம்ப நடைமுறை வேலை மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,116.06 மில்லியன் ஆன செம்மையாக்கல்களுக்கு மத்தியில் ரூபா 418.75 மில்லியனான செம்மையாக்கல்களை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	CIGAS முறைமையிலுள்ள குறைபாட்டின் அடிப்டையில் என்பதனால் அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் இணைந்து சரிசெய்யப்படும்.	பெறுமதியை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் கணக்கீடு செயயப்படுதல் வேண்டும்.

2 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாக தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	அமுல்பபடுத்தப்படாத சிபாரிசு	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
1.6.1(அ)	வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களிலிருந்து பெற்ற வருமானம் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	1.6.1 (அ)
1.6.1(இ)(iv)	வருமானம் உழைக்கும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	1.6.1(ஈ)(v)
2.3(அ)	பொறுப்புக்கள் நிதி கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	3.3(அ)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	தரைப்படையினால் உரிய துறை தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி வருமான மதிப்பீடுகள் தயாரிக்காமையின் காரணமாக வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களின் மூலம் மீளாய்வாண்டில் எதிர்பார்த்த வருமானம் ரூபா 1,080.34	நாட்டில் காணப்பட்ட பொருளாதார கொள்கை, காலநிலை தாக்கம் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் வருமானத்தை முன்னறிதலில் மாற்றம் ஏற்படலாம்.	மதிப்பீட்டினை முடியுமான அளவிற்கு சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மில்லியன காட்டப்பட்டிருந்தும் ரூபா 1,357.64 மில்லியன் உள்ளபடியான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	மீளாய்வாண்டில் சமாதான செயற்பாட்டு கடமைகளின் மூலம் ரூபா 1,212.53 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டின் இறுதி அரை ஆண்டு தொடர்பாக ரூபா 548.58 மில்லியனும் 2024 ஆம் ஆண்டின் தொடக்க அரையாண்டு தொடர்பாக ரூபா 739.26 மில்லியனும் ஆக வருமானத்தை உழைத்து மீளாய்வாண்டிகான வருமானமாக கொண்டு வரப்பட்டிருந்தது.	ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் இரண்டு காலாண்டுகள் தாமதித்து கொடுப்பனவு செய்யப்படுவதனால் மேற்கூறிய பிரச்சினை ஒவ்வொரு ஆண்டிலும் உருவாகின்றது.	புரிந்துணர்வு உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய படிகளை வேண்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	பதினொன்று மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவு விடயத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு போதாமையின் காரணமாக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 13.37 பில்லியன் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல் அச்செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினை விட 16 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. நிதி ஏற்பாடு மாற்றப்பட்ட செலவு விடயங்களுக்காக	2024 ஆம் ஆண்டிற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடம் வேண்டிக் கொண்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் கிடைக்காததனாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனாலும் நிதி ஏற்பாடு மாற்றிக்கொள்ளப்பட்டது.	மதிப்பீட்டினை முடியுமான அளவு சரியாகத் தயாரித்து அங்கீகரித்த மதிப்பீட்டு எல்லைக்குள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போர்து அதிக பெறுமதியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	222-01-01-1205 (ஏனையவை) செலவு விடயமானது உறுதியாக அடையாங்காணமுடியாத செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது உறுதியாக அடையாளங்காணக்கூடிய செலவு விடயங்களுக்காக ரூபா 3,514.90 மில்லியனுடன் ரூபா 4,040 மில்லியன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து அதில் ரூபா 2,114.38 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,925 மில்லியன நிதி ஏற்பாடு ஏனைய செலவு விடயங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறிய செலவு விடயத்திலிருந்து ரூபா 2,281.90 மில்லியன் தொகை இருப்புக்கள் மற்றும் வெடிபொருளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வெடி பொருளுக்காக ரூபா 478.97 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஏனைய செயற்பாடுகளுக்கான செலவுகளுக்காக இச்செலவு விடயத்தில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.	தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு தரைப்படையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் முகாமைத்துவம செய்ய வேண்டியுள்ளதனால் அவ்வப்போது உருவாகக் கூடிய பல்வேறு தேவைபாடுகளுக்கு நிதி ஏற்பாட்டினை வழங்குதல் சிக்கலானது என்பதனால் மற்றும் தரைப்படைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் மூலம் அத் தேவைப்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.	மதிப்பீடுகளை முடியுமான அளவுக்கு சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 1,978.39 மில்லியனான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய குறிப்பு இலக்கம் iii இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அத்தியவசியமாக செலவு செய்ய வேண்டி ஏற்பட்ட செலவுகள் என்பதனால் குறிப்பு இலக்கம் 07 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான பெறுமதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளுக்கு இணங்க தரைப்படை அந்த கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 290.84 மில்லியன் செலுத்த வேண்டிய போதிலும் தரைப்படையின் பொறுப்புக்கள் அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 40.08 மில்லியன் என்பதனால் ரூபா 250.76 மில்லியன் குறைத்து அறிக்கையிடப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டு தொடர்பாக தீர்த்துவைக்க வேண்டியிருந்த மிகுதியான மீதி உள்ளடங்கலாக ரூபா 250.76 மில்லியன் பெறுமதியை 2025 ஆம் ஆண்டில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நடைமுறை ஆண்டிற்கான செலவுகளை அந்த ஆண்டிலேயே தீர்த்துவைப்பதற்கு எப்போதும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
126-02-03-02-2001-11 ஆம் இலக்க செலவு விடயம் தொடர்பாக கல்வி அமைச்சினால் ஒரு பாடசாலையை புனரமைப்புச் செய்லவதற்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 10.47 மில்லியன் நிதி ஏற்பாடு முழுவதும் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 55 சதவீதம் மாத்திரமாகக் காணப்பட்டது.	அங்கீகரித்த நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் தேவையான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரித்த கால எல்லைக்குள் சேவையை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	ஏனை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால வழங்கிய நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத்துல் வேண்டும்.

3.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பநதமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் வகையில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாககளுக்கு பதில் வழங்கப்படவில்லை.	சம்பளங்கள் மற்றும் பதிவேடுகள் பணிப்பாளர் சபை இதற்காக ஒரு கடிதத்தினை சமர்ப்பித்துள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை முறைப்படியாக அமுல்ப்படுத்துவதற்காக வினைத்திறனான ஒரு நடைமுறை உள்ளது எனபதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தியிருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.4 மற்றும் 4.8 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அததேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை .	இக்குறைபாட்டினை தவிர்த்துக்கொள்வதற்காக புயதி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்			**சிபாரிசுகள**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**	**இணக்கமின்மை**		
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை				
(i) நிதிப்பிரமாணம் 214	-	தரைப்படையினால் நாளாந்தம் நாளதுவரையாக்குகின்ற ஒரு பொறுப்புக்கள் பதிவேடு பேணப்படாமையின் காரணமாக நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.	கணனி தரவு முறைமை பேணப்பட்டு வருகின்றது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) நிதிப்பிரமாணம் 511(அ) மற்றும் 513(ஆ)	-	முற்பண கபணக்கு நடவடிக்கைகளில் எதிர்பார்த்த தொழிற்பாட்டு நட்டத்தை தீர்த்துவைப்பதற்காக வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாத 222-01-01-1701 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 இற்கு இணங்க ரூபா 3.53 மில்லியன்	அடுத்துவரும் ஆண்டிற்காக மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது நியாயப்படுத்தக்கூடிய மதிப்பீட்டுப் பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும்.

			நிதி எற்பாடு மாற்றப்பட்டிருந்தது.		
(iii)	நிதிப்பிரமாணம் 1646	-	மீளாய்வாண்டின் மே மாதம் தொடர்பாக 6540 வாகனங்களின் மாாந்த பொழிப்பும் நாளாந்த ஓட்ட அட்டவணையும் கணககாய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் 2727 வாகனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய அறிக்கை 02 மாதங்களிலிருந்து 07 மாதங்கள் வரை தாமதித்திருந்தது.	எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு மாதாந்த ஓட்ட பொழிப்பும் மாதாந்த வாகன சம்பவ குறிப்பு பத்திரத்தினையும் சமர்ப்பிப்பதற்கு முடியுமான வகையில் ஆயத்தப்படுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	மாதாந்த ஓட்ட அட்டவணைகளின் பொழிப்பு அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்டவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	அரசாங்க நிருவாக சுற்றறிக்கை				
(i)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை	-	முறையான எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ளாது தரைப்படையினால் 2324 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.	2025 ஆம் ஆண்டின் தொடக்க 04 மாதங்களில் 759 வாகனங்களின் எரிபொருள் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.	வருடாந்தம் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ii)	1989 மார்ச் 23 ஆந் திகதிய 19/89 ஆம் இலக்க, 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க	-	சிவில் நிருவாக பணிப்பாளர் சபையில் 8325 ஆன ஒட்டுமொத்த ஆளணியின் வருகை மற்றும் வெளிச்செல்லலினைப் பதிவு செய்வதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரத்தினைப் பயன்படுத்தாது சம்பளம், படிகள்,	தொடக்க முயற்சியாக ஒருகொடவத்த மற்றும் யுகரோ (கொழும்பு) அலுவலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி இடங்களில் துரிதமாக மேற்கொள்ப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரல் அடையாளமிடும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	2009 யூன் 17 ஆந் திகதிய 09//2009(i) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை		மேலதிக நேர வேலைப்படிகள் என்பன செலுத்தப்பட்டிருந்தன.		
(இ)	தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கை				
	தே.பெ.மு. சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 9.3.1 (ஆ) வழிகாட்டிக் கோவை மற்றும் 2021 ஏப்ரல் 21 ஆந் திகதிய திருத்தம்	-	மீளாய்வாண்டின் போது தரைப்படையினால் ரூபா 448.93 மில்லியன் செலவு செய்து 246 வாகனங்களை திருத்தம் செய்யும் போது வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.	அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஈ)	தேசிய பாதீட்டு சுற்றறிக்கை				
	2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை	-	வெளிநாட்டு அனுசரணை நிறுவனத்தினால் முழுமையான கிரயத்தினையும் செலவு செய்யாத வெளிநாட்டு கல்வி/ பயிற்சி/ கலந்துரையாடல்/ கருத்தரங்கு/ சுற்றுப்	2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு கற்கை நெறிகளை கொள்வனவு செய்வதற்காக எந்த செலவும் மேற்கொள்ளப்படாததுடன் அத்தியவசியமான	அனுசரணை நிறுவனத்தினால் முழுக்கிரயத்தினையும் செலவு செய்யாத வெளிநாட்டு பயிற்சிகளுக்காக செலவு செய்யாதிருத்தல் வேண்டும்.

			பயணத்திற்காக உத்தியோகத்தர்களை பங்கு பற்றச் செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 334.9 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.	படிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது.	
(உ)	கொம்ட்ரோலர் ஜெனரால அலுவலக சுற்றறிக்கை				
	2022 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 10/2022 ஆம் இலக்க மற்றும் 2023 சனவரி 30 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	-	2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது கைதவிரப்புச் செய்யப்பட வேண்டும் என சபை அறிக்கையின் மூலம் அடையாளங்காணப்பட்ட 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 49.34 மில்லியன கிரயமான 24 வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	47 வாகனங்களை கைதவிர்ப்புச் செய்து பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் 24 வாகனங்களின் அங்கீகரித்தல் பிரச்சினையின் காரணமாக விறபனை செய்வதற்கு முடியாதுள்ளது.	வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் அந்த அதிகாரச் சட்டத்ததிற்கு 2022 திசெம்பர் 28 ஆந் திகதிய 2312/16 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்	-			
	(i) 2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் இலக்க, 2023 ஏப்ரல் 06 ஆந் திகதிய SEC/2023/E/02 ஆம் இலக்க மற்றும் 2023 யூலை 18 ஆந் திகதிய SEC/2023/02 ஆம் இலக்க சுற்றறிக்கை	-	முற்பணங்கள் தனிப்பட்ட நபர் வருமான வரி கணிப்பீட்டின் போது நிதிசார் மற்றும் நிதி சாராாத பிரதிபலன்கள் மீது 1536 உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்க வேண்டிய ரூபா 112.24 மில்லியன் வரிப்பணம் உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்திற்கு குறைத்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.	இதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான வரிப் பெறுமதியை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ii)	2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் இலக்க 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு வருமான வரி அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு மற்றும் 2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி	-	வரி விடுவிக்கப்பட்ட வருமான மூலங்களுக்குள் உள்ளடக்கப்படாத தரைப்படைக்காக வழங்கப்பட்டுள்ள சீருடை பராமரிப்பு, உணவு பொருள், உதவி, கடினம் ஆகிய படிகள் வரிக்கு உட்படாத ஊழியர்கள் உழைக்கின்ற இலாபமாக கருதி முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரி கணிப்பீடு செய்யக்கட்டிருந்தது.	பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து கிடைக்கின்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	வரிப் பெறுமதியானது சரியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரம் இல்லாத கொடுப்பனவுகள்

தரைப்படையினால் அதிகாரம் இல்லாத பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2022 திசெம்பர் 19 ஆந் திகதிய MOD/DEF/GS/M/32(53) ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சின்	பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நி.பி 136 இன் கீழ் செலவு	முறையான அங்கீகாரமின்றி அரசாங்க செலவுக்கு

மேலதிக செயலாளரின் (பாதுகாப்பு) கடிதத்தின் பிரகாரம் சேவை, சேவை மனப்பாண்மை மற்றும் 75 ஆவது சுதந்திர தின ஞாபகார்த்த பதக்கங்கள் அரசாங்க நிதியை பயன்படுத்தாது விழா சந்தர்ப்பத்திற்காக தேவைப்படும் அளவினை மாத்திரம் பெறுகை செய்யுமாறும் 2023 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய பதக்கங்களை கொள்வனவு செய்வதற்காக கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்தும் அந்த விதிமுறைகளை மிகைத்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கட்டளைகள் வழங்கப்பட்டு தரைப்படை தளபதி நிதியத்திலிருந்து செலவு செய்த ரூபா 223.7 மில்லியன் பணம் தரைப்படை செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	செய்வதற்காக பாகாப்பு அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்கிணங்க வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு இணங்க இந்த பதக்கங்களின் அளவினை கொள்வனவு செய்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டது.	வரவு வைக்கும் குழு தீர்மானம் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) சான்றுபடுத்தப்படாத கொடுப்பனவுகள்

முறைப்படியாக சான்றபடுத்தப்படாது பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிதிப்பிரமாணம் 138.1 இலிருந்து 138.9 வரையான பிரிவுகளின் பிரகாரம் முறையான அங்கீகாரமில்லாத உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்ட ரூபா 3,925.61 மில்லியன் செலவுகள் 1401(vi)a மற்றும் 1401(vi)b ஆம் இலக்க செலவு விடயங்களின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் கீழ் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முறையான அங்கீகாரத்துடனான உத்தியோகத்தர்கள் சான்றுபடுத்துதல் வேண்டும்.

3.8 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2023 யூன் ஒக்தோபர் மற்றும் 2024 சனவரி மாதங்களின் போது ரூபா 05 மில்லியன் வீதம் மற்றும் 2024 மார்ச் மாதத்தில் ரூபா 03 மில்லியனாக மொத்தமாக ரூபா 18 மில்லியன் பணம் மோசடியாக சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளர் சபையின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரு உத்தியோகத்தரினால் ஒவ்வொரு மாதத்திலும் தமது சம்பளத்துடன் சேர்த்து மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான நிதி மோசடிகளை தவிர்த்துக் கொள்வதற்காக சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.	மோசடிகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அமுல்ப்படுத்துதல்.
(ஆ)	தரைப்படை சேவையிலிருந்து நீக்கும் நடவடிக்கைக்காக அறிக்கையிடப்பட்டிருந்தும் அக்காலப்பகுதியில் மற்றும் விடுமுறை எடுக்காது சேவைக்கு சமூகமளிக்காத (பங்கேற்காமை) காலத்திற்காக செலுத்தப்பட்டுள்ள சம்பளமும் படிகளும் அக்காலப்பகுதிக்குரிய அந்த நபரகளின் பெற்றோருக்கு செலுத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்களின் தாய் தகப்பனை பேணிக்காக்கும் விசேட படிகள் மற்றும் அந்த நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் உள்ளடங்கலாக ரூபா 17.60 மில்லியனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவை தீர்க்கப்பட்டு வருவதுடன் கணனி மென்பொருளின் மூலம் பங்கேற்காத நபர்களுக்கு சம்பளம் கிடைப்பதனை நிறுத்தும் வகையில் வசதிகளை ஸ்தாபித்து பேணுதல்.	வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையினை ஸ்தாபித்து பேணுதல் வேண்டும்.
(இ)	தரைப்படை அங்கத்தவர்களின் பெற்றோர்கள், உயிருடன் இருக்கின்றார்கள் என உறுதிப்படுத்திக்கொள்ளாது ரூபா 31.23 மில்லியன் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.	மாதாந்தம் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து ரெஜிமன்ட் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.9 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்றுள்ள இராணுவ மற்றும் சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து இதுவரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்த ரூபா 86.15 மில்லியன் இடர், விழா மற்றும் விசேட முற்பண கடன் மீதிகள் காணப்பட்டதுடன் இக்கடன் மீதிகளுக்கு மத்தியில் ரூபா 0.55 மில்லியன் கடன் மீதி 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதி ஆனதுடன் ஏனைய கடன் மீதிகளும் 01 ஆண்டிற்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதான போதிலும் இக்கடனை அறவீடு செய்தல் திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த நிலுவைக் கடன் மீதிகளை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும்.

3.10 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நிச்சயமற்றதாக வைத்துள்ள மீதிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்வகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் அல்லது முடியுமான அளவு விரைவாக கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 6.36 மில்லியன் மீதி மீளாய்வாண்டின் போது மிகுதியாக இருந்தது.	நி.பி 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு பிராந்திய கணக்காளர் அலுவலகங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.	இந்த வைப்பு மீதிகளை தீர்த்துவைப்பதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.11 வங்கி கணக்கு செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2020 ஒக்தோபர் 28 ஆந் திகதிய TD/BE2/4/UNINCOME/ARMY ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அமைதிப் படை கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை தரைப்படைக்கு வெளிநாட்டு நாணயத்தில் (அமெரிக்க டொலர்) கிடைக்கின்ற வருமானத்தில் அமெரிக்க டொலர் 1,299,480 கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு மிகுதி மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திலிருந்து 2025 பெப்ரவரி மாதம் வரை அந்த எலலையினை மிகைத்து அமெரிக்க டொலர் 166,877.55 இலிருந்து அமெரிக்க டொலர் 3,061,238.09 வரையான வரம்பில் கணக்கில் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	ஐக்கிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தினால் உறுதிபபடுத்தியதன் பின்னர் திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிர்ணயிக்கப்பட்ட எல்லையினை மிகைக்கின்ற வைப்பு பணம் மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பல்லேகெலே தரைப்படை ஆதார வைத்தியசாலை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i) கண்டி பிரதேசத்திலும் அதனை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் சேவையாற்றுகின்ற மற்றும் குடியிருக்கின்ற 32000 இராணுவத்தினர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சிகிச்சை வழங்கும் குறிக்கோளில் ரூபா 1,393.62 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 2021 யூலை 09 ஆந் திகதியிலிருந்து வைத்தியசாலை சேவை	சிகிச்சை நடவடிக்கைகளுக்காக தேவைப்படும் வகையில் மருத்துவ தொழில்சார் வல்லுனர்கள் கடமையில் ஈடபடுத்தப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையிலுள்ள மருத்துவ உபகரணங்கள் தேவைக்கேற்றவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.	வினைத்திறனான தேசிய சுகாதார செயற்பாடுகளுக்காக பிரேரணைகளை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

	நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்க கூடியதாக இருந்ததுடன் கண்டி பல்லேகெலே வைத்தியசாலை அத்திகயிலிருந்து மூன்று ஆண்டுகள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக வைத்தியசாலை நடவடிக்கைகளுக்காக திறக்கப்படாதிருந்தது.		
(ii)	பழைய வைத்தியசாலையின் கட்டில்களைப் பயன்படுத்துகின்ற வீகிதாசாரத்தினை புதிதாக நிர்ணயிக்கப்பட்ட புதிய வைத்தியசாலையில் காணப்படுகின்ற கட்டில்களை பயன்படுத்தும் வீதாசாரத்துடன் ஒப்பீட்டுப் பார்க்கும் போது அது 4 சதவீதம் வரையான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் மருத்துவர்கள் உள்ளடங்கலாக 116 மருத்துவ ஆளணியினரிடமிருந்து வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் வகையில் திட்டங்கள் தயாரிக்காமையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வைத்தியசாலையின் உச்ச அளவு வினைத்திறனை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.	முன்னர் சேவையில் ஈடுபட்டிருந்த நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதுடன் புதிய வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டு ஓய்வு பெற்ற நபர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு சேவை வழங்குதல் இடம்பெறுவதனால் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது.	காணப்படும் நிலைமையை சிறப்பாக ஆய்வு செய்து பொருத்தமான திட்டங்களைத் தயாரித்து வைத்தியசாலையினை செயறபடுத்துதல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணங்கிக் கொண்ட வாகனங்கள்/ உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை எடுத்துச் செல்வதற்கு தாமதித்தமை, உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் ஓடுவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படாமை என்பவற்றின் காரணமாக ஐக்கிய நாடுகளின் அமைதிப்படை கடமைகளுக்காக 2024	இது தொடர்பாக விபரமான ஆய்வினை மேற்கொண்டு வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிகைக்கு இணங்கியிருப்பதன் மூலம் வருமானம் இழக்கப்படுவதனை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆம் ஆண்டின் தொடக்க இரண்டு காலாண்டுகளில் அ.டொலர் 2.68 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

4.3 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2014 ஆம் ஆண்டில் 6,213.2 சதுர மீற்றர் அளவிலான நான்கு மாடி விழா மண்டப கட்டிடத்தினை பல்லெகெலே பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு 2019 ஆம் ஆண்டு வரை அதற்காக ரூபா 197.88 மில்லியன் ஆன வேலையாட்கள் கூலி மற்றும் ஏனைய செலவுகள் அரசாங்கத்தின் மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்களிலிருந்து செலவு செய்யப்பட்டதுடன் பின்னர் அதன் ஒரு பகுதி பல்லேகெலே தரைப்படை வைத்தியசாலையாக அபிவிருத்தி செயயப்பட்டிருந்தும் இன்றுவரை நிர்மாண வேலைமுடிவடையாது காணப்பட்டதுடன் மிகுதிப் பகுதியில் தயாரித்த சில கோபுரங்கள் வெடித்திருந்தன.	இக்கட்டிடம் தரைப்படையின் ஒரு வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ளதுடன் உரிய பட்டைகள் கட்டிடம் நிலைத்திருப்பதற்கு பாதிப்புக்கள் இல்லை.	வினைத்திறனான தேசிய பொருளாதார செயற்பாடிற்காக பிரேரணகளை தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தங்குமிட வசதிகள், அலுவலகங்கள் மற்றும் களஞ்சிய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருடாநதம் ரூபா 172.03 மில்லியன் செலவு செய்து 22 கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் தரைப்படையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாடகைக்குப் பெற்ற கட்டிடமும் அவற்றிற்கு மத்தியில் உள்ளன. ரூபா 1,055.29 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் நாட்டில் பல்வேறு பிரசேங்களில்	கட்டுநிதி கிடைக்காமையால் ஏற்பட்ட நிலையாகும்.	உரிய செயற்திட்டங்களிலிருந்து திட்டமிடப்பட்ட செயல்முன்னேற்றம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆரம்பிக்கப்பட்டுள்ள அலுவலக கட்டிடங்கள், குடியிருப்புக்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், பொருள் களஞ்சியம், பொது பொழுதுபோக்கு வசதிகளுக்கான கட்டிடங்கள், ஏனைய நிர்மாணங்கள் ஆகிய 38 நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் சதவீதம் 0 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

4.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிதிக் கூற்றுக்கில் காட்டப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பண்ணைகளை நிருவகிப்பதன் மூலம் உழைக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 47.07 மில்லியன் குறைத்தும் 04 நலன்புரி ஹோட்டல்கள் மற்றும் தல்செவன விடுமுறை இல்லங்களிலிருந்து உழைத்த ரூபா 53.9 மிலலியன் தேறிய வருமானம் முழுவதும் 2024 ஆம் ஆண்டு தொடர்பாக தரைப்படையினால் தயாரித்துள்ள வரைபு வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிலிருந்து இந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளபடியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வருடந்த செயலாறறல் அறிக்கையினை சரியாக தயாரித்தல் வேண்டும்.

4.6 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
தெரிவுப் பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு மட்டுப்படுத்தப்பட்ட/ கட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி முறைமை மற்றும் தேசிய போட்டி கேள்விமனு முறைமையை பின்பற்றி மிளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,014.86 மில்லியன் பெறுகைகளின் போது கால அட்டவணை தயாரிக்காமை, பெறுகை முறைமையை தெரிவு செய்வதில் பிரச்சினை, பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தை தயாரிக்கும் குறைபாடும் பொருள் விபரக் குறிப்புடனான இணக்கமின்மையை	எதிரகாலத்தில் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் முறையான பொறுப்புக்களை ஒப்படைத்து அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களை அடையாளங்காணல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

பொருட்படுத்தாமை, மாதிரிகளை பெற்றுக்கொள்வதில் தாமதம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை 30 நாட்களிலிருந்து 192 நாட்கள் வரை தாமதித்து நியமித்தலும் அறிக்கை வழங்குவதற்கு 96 நாட்களிலிருந்து 368 நாட்கள் வரை எடுத்தல், கட்டளைகள் வழங்கிய நாளிலிருந்து பொருட்களை களஞ்சியத்திறகு பெற்றுக்கொள்வதற்கு 42 நாட்களிலிருந்து 884 நாடகள் வரை எடுத்தல் மற்றும் தரமான பொருட்கள் கிடைக்காமை ஆகிய காரணங்களால் பெறுகை நடைமுறையை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் மேற்கூறிய விடயங்களின் காரணமாக ரூபா 176.54 மில்லியன் மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.		

4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) முறைப்படியாக பொறுப்பேற்காது தரைப்படையினால் ஏனைய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளடங்கலாக அரசாங்கத்தின் ஏயை நிறுவனங்களிடமிருந்து உழவு .இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள், அம்புலன்ஸ்கள், கெப் வாகனங்கள், ஜீப்கள், எரிபொருள் பவுஸர்கள், பஸ்கள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்கலாக 73 வாகனங்களைப் பயன்படுத்தி வருவதுடன் இந்த வாகனங்களுக்கு மத்தியில் 24 வாகனங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியின் போது	இந்த வாகனங்களைப் பெறுப்பேற்பதற்காக தேவையான ஆவணங்களை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தேவையான மேலதிக நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த ஆவணங்களைப் பெற்ற பின்னர் பொறுப்பேற்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	இந்த வாகனங்களை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுததல் வேண்டும்.

	பொருத்தமான ஓடும் நிலையில் காணப்படாதனால் தரைப்படை வளவுகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.		
(ஆ)	தரைப்படையின் சுவீகரிக்கப்பட்ட 547 வாகனங்களுக்கு மத்தியில் 454 வாகனங்களுககாக காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் 221 வாகனங்கள் 2024 ஆம் ஆண்டின் போது எந்த நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தாது தரைப்படை வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	ஏனைய இராணுவ வாகனங்களுக்காக காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கும் காப்புறுதி இல்லாத வாகனங்களை ஓட்டுவது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	புத்தளம் பயிலுனர் பயிற்சி நிலையத்தின் மூலம் சேவைசார்ந்த பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொளளுதல் தரைப்படையின் முன்னுரிமைச் செயற்பாடாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையினைப் பரீட்சித்த போது அந்த பயிற்சி நிலையம் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	தாமதத்தின் காரணமாக சமர்ப்பிப்தற்கு முடியாதிருந்தது.	செயலாற்றல் அறிக்கையினை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	தரைப் படையினால் நிருவகிக்கப்படுகின்ற 12 பண்ணைகள் மற்றும் 03 நலன்புரி ஹோட்டல்கள் செயற்படுத்தப்படுகின்ற 4,096.49 ஏக்கர் காணிகள் பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்குரியதானதுடன் அக்காணிகளை தீர்த்துவைத்து தரைப்படையின் பெயரில் பொறுப்பேற்று உரிய செயற்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக தரைப்படை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	இக்காணிகளில் 4,000.89 ஏக்கர்களை தீர்த்துவைத்த தரைப்படையின் பெயரில் பொறுப்பேற்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.	துரிதமாக காணிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	அமைதிப் படை கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்த ரூபா 68.34 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 138,181.13 பெறுமதியான அத்தியவசியமான பொருட்கள், ஆயுத மற்றும் ஆயுதமற்ற வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.	அமைதிப்படையின் இருப்பில் காணப்படுகின்ற விடயங்களை தரைப்படையின் இருப்பிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு தேவைப்பாட்டிற்கு இணங்க வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கொள்வனவு செய்துள்ள இந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்களை அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கிடைக்கும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஊ)	பல்லேகெலே வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்த ரூபா 841.63 மில்லியன் பெறுமதியுள்ள மின்சாரம், மருத்துவம், சமையலறை, மனைப்பொருள் உள்ளடங்கலாக பல்வேறு உபகரணங்களும் பொருத்திகளும் மற்றும் கட்டிட உட்கட்டமைப்பு வசதிகளும் பொருள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்காததுடன் அவற்றில் ரூபா 272.01 மில்லினான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 124.4 மில்லியன் செலவுசெய்து கொள்வனவு செய்த 262 உபகரண விடயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் முறைமைகளின் சுதந்திரமான உத்தரவாத காலம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்ததுடன் அக்காலத்தில் இச்சொத்துக்கள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டு	நோயாளிகளும் விசேட வைத்தியர்களும் இல்லாததனால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது உத்தரவாத காலம் முடிவடைந்துள்ளதுடன் அனைத்து உபகரணங்களையும் பயிற்சி தொழில் நுட்பவியலாளர்கள் பயன்படுத்தி வாராந்தம் சேவை செய்தல் மேற்கொள்ளப்பட்டன. இருப்புக்கு கொண்டுவரப்படாத சொத்துக்கள் ஒரு கண்காணிப்பு உத்தியோகத்தரின் கீழ் பராமரிக்கப்படுவதுடன் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத சொத்துக்கள் விரைவாக பதிவேட்டிற்கு கொண்டுவரப்படும்.	வினைத்திறனான பொருளாதார நடவடிக்கைகளுக்காக பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்துவதற்கும் உபகரண்ங்களை சரியாக இருப்பெடுத்து முறைப்படியாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காணப்பட்டதனால் அந்த செலவு செய்த பணத்திலிருந்து முறையாக பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(எ)	கடுபெத்த சிறீலவியாயி தொடக்க வேலைத்தள வளவில் காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத 107 வகையான உதிரிப்பாகங்களின் 12,938 அலகுகள் 2024 பெப்ரவரி 26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள தகுதி நீக்கம் செய்யும் சபை அறிக்கையின் மூலம் தகுதி நீக்கம் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற உதிரிப்பாகங்கள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற தகுதி நீக்கம் செய்யும் குழுவுக்குச் சமர்ப்பித்து அவற்றின் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	விளைவற்ற உதிரிப்பாகங்களை துரிதமாக கைதவிர்ப்புச் செய்து வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும்.
(ஏ)	தரைப்படையினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகையான 65,564 வெற்றுவெடிமருந்து பைகளை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மிகுதியான வெடிமருந்து பைகள் சம்பந்தமாக தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	பாதுகாப்பாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
உலர் உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஒழுங்கீனங்கள் சார்ந்த சம்பவங்கள், வாகன விபத்து சம்பவங்கள், பயங்கரவாத தாக்குதல் சார்ந்த சம்பவங்கள், பயங்கரவாதம் அற்ற காரணங்களின் அடிப்படையில் உருவாகிய நட்டம் மற்றும் சேத சம்பவங்கள் என்பவற்றில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 97 சம்பவங்கள் உள்ளடங்கலாக 315 முழுச் சம்பவங்களுக்கு மொத்தமாக ரூபா 13.263 மில்லியன் நட்டம் காணப்பட்டது.	51 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நட்டங்கள் மற்றும் சேதங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மிகுதியான நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்யும் நடைமுறையை துரிதப்படுத்துதல் வேண்டும்.

4.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ஒரு வழங்குனருடன ரூபா 233 மில்லியன் பெறுமதியான “Cloth Cotton Drill Olive Green 58/66” வகையான 142,000 மீட்டர் துணிகளை கொள்வனவு செய்வதற்காக 2022 செப்தெம்பர் 15 மற்றும் திசெம்பர் 30 ஆந் திகதிகளில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் வழங்குனர் 2024 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 134,783 மீடடர் துணிகளை வழங்கியிருந்தும் உரிய எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு முடியாமையினாலான தொழிற்படு மூலதன நட்டத்தினை அறவீடு செயவதற்கு மற்றும் உரிய வழங்குனரினை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தரைப்படைக்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துவைப்பதற்காக ரூபா 23.30 மில்லியன் செயலாற்றல் பிணைமுறியிலிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ளது.	உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல்கள் இடம்பெறாத மீறுதல் நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மாதாந்தம் ஒரு வாடகை வாகனத்தை பயன்படுத்தக்கூடிய சராசரி கிலோ மீற்றர் அளவினைவிட குறைந்த கிலோ மீற்றர் அளவு பயன்படுத்தப்பட்டுளள வாகனங்களுக்காக ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 16 எதிர்பார்த்த வாடகைக்காக ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 47 இலிருந்து ரூபா 63 வரை பாரிய அளவில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆறு வாகனங்களின் செயற்படும் மைலோ மீற்றருக்கு இணங்க ஓடிய துாரத்தின் அளவினை விட 31,882 கிலோ மீற்றருக்காக மிகையாக 3,751 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் வாகன விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை மீண்டும் மீளாய்வு செய்யப்படும்.	வாகன வாடகை மற்றும் எரிபொருள் செலவுகளை ஆக்கபூவர்மாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்தல் வேண்டும்.

(இ)	துருக்கி நாட்டின் அவசர இடர் நிலைமைக்காக நிவாரண குழுவிற்கு ரூபா 15.92 மில்லியன் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்யும் பொது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் கட்டளைகள் வழங்குவதற்கு முன்னர் வழங்குனர்களினால் ரூபா 11.34 மில்லியன் பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 9.09 மில்லியன் பெறுமதியான பொருட்கள் உரிய பயணம் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	உரிய பயணம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக இப்பொருட்கள் பல்வேறு அதிகாரப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வருடாந்த தேவைப்பாட்டிற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தேவைப்பாட்டினை சரியாக அடையாளங்கண்டு பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

தரைப்படைக்கு வழங்கப்பட்ட பின்வரும் விபரங்கள் குறிப்பிட்ட கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் தகவல்களைக் கோருதல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	2024 திசெம்பர் 30 ஆந் திகதி மற்றும் 2025 மே 22 ஆந் திகதி வழங்கப்பட்ட DEF/A/SLA/2024/18 மற்றும் DEF/A/SLA/2024/34 ஆம் இலக்க கணககாய்வு ஐய வினாக்களுக்காக பதில் சமர்ப்பிக்கப்படவில்லை	DEF/A/SLA/2024/18 ஆம் இலக்க ஐய வினாவிற்காக சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளர் சபையினால் ஒரு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பதில் வழங்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் பொறுப்புக்களுக்குரிய 14 வழங்குனர்களின் ரூபா 1,798 மில்லியன் மீதியினை உறுதிப்படுத்துவதற்காக அந்த நிறுவனங்களுக்கு உரிய கடிதங்கள் தொலைபேசி இலக்கங்கள், மின்அஞ்சல் விலாசங்கள் என்பன தொடர்பான தகவல்கள் தரைப்படையிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும்	வரைபு அறிக்கையன் பதிலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்தகவல்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வழங்கப்படாமையால் பெர்றுப்புக்கள் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

4.11 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தகவல்களுக்கு இணங்க தரைபடை தளபதியின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 6,751 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் தரைப்படையினால் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படாத 6,476 வாகனங்கள் காணப்படுவதுடன் அதற்கிணங்க 275 வாகனங்களின் வித்தியாசம் காணப்படுகின்றது.	இந்த வித்தியாசத்தை ஆண்டின் போது சரிசெய்வதற்குரிய நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	தரைப்படையின் வாகனங்களுக்கும் பதிவுசெய்த வாகங்களுக்குமிடையேயான வித்தியாசத்தை தீர்த்துவைத்தல் வேண்டும்.
(ஆ)	தரைப்படைக்குச் சொந்தமான குண்டசாலையில் அமைந்துள்ள 68.4 பேச்சர்ஸ் அளவிலான காணி அனுமதியறற குடியிருப்பாளர்களால் 2007 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து கைப்பற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் இக்காணியை தீர்த்துவைத்து தரைப்படையினால் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலாளருடன் இணைந்து தீர்த்துவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	தரைப்படைக்குச் சொந்தமான காணியை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	ஓடமுடியாத நிலையில் காணப்படுகின்ற 387 மோட்டார் வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்து வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	47 வாகனங்கள் மாத்திரம் தற்பொழுது திருத்தம் செய்வதற்காக வேலைத்தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.	வாகனங்களை நிர்ணயிக்கப்பட்டவாறு திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக உரிய செலவுகள், சரியான கணக்கேடுகள், அறிக்கைகள் மற்றும் குறிப்புக்களை பேணுவது போல வருமானங்களுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதிலிருந்து வங்கியில் வைப்புச் செய்யும் வரை உரிய உள்ளகக் கட்டுப்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பதற்கு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்குகள் பிரதான உள்ளகக் கணக்காளரினால் சான்றுபடுத்தியதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வருமானங்களை நிர்ணயிக்கப்பட்டவாறு அடையாங்கண்டு கணக்கீடு செய்து திறைசேரிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.
(உ)	வேரஹெர தரைப்படை வைத்தியசாலையில் அமைந்துள்ள மருந்துக் களஞ்சியசாலை கட்டிடம் சுகாதார அமைச்சின் மற்றும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையின் மற்றும் சர்வதேச நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக 14,450 சதுர அடி அளவிலான களஞ்சிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு 2021 யூலை 04 ஆந் திகதி ரூபா 10.3 மில்லியன் செலவு செய்யப்பட்டு அத்திவாரம் இடுவதற்கு மற்றும் 2024 ஆம் ஆண்டில் ரூபா 31.9 மில்லியன் செலவு செய்து கட்டிடத்திற்கு தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இக்கட்டிட	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேறறம் 50% ஆனதுடன் மிகுதிப் பெறுகைகள் செயற்திட்டத்திற்கு கிடைத்ததன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டமிட்டவாறு கட்டிடத்தினை நிர்மாணித்து பாதுகாப்பாக மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

	நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	அரசாங்க மருத்துவ வழங்கல் பிரிவிடம் கொள்வனவு செய்த ரூபா 9.59 மில்லியன் கிரயமான 80 வகையான மருந்துகள் பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டும் உள்ளதுடன் அக்கிரயத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அவற்றில் ரூபா 6.4 மில்லியன் பெறுமதியான மருந்துகள் எரிக்கப்பட்டிருந்தது. மிகுதி மருந்துகள் மற்றும் உதவியாக பெற்ற மருந்துகளின் பெறுமதியை உறுதிப்படுத்த முடியாததுடன் மருந்துகள் உரிய குறிக்கோள்களுக்காக வழங்கப்படாமையின் காரணமாக காலாவதியாகி இருந்தன. அந்த அனைத்து மருந்துகளும் களஞ்சியத்தில் ஏனைய மருந்துகளுடன் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.	மருந்து வழங்கல் பிரிவின் மூலம் அந்த மருந்துகளை துரிதமாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் குறுகிய காலப்பகுதிக்குள் காலாவதியாவதற்கு அண்மித்துள்ள மருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன்.	மருந்துகளை கள்ஞசியப்படுத்துவது தொடர்பாக அரசாங்க வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	ரூபா 20.10 மில்லியன் கிரயம் செலவு செய்து 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த 20 எண்ணிக்கையான Heavy Duty Photocopy Machine குறைவாக பயன்படுத்தும் நிலையில் காணப்பட்டதுடன் இந்த இயந்திரங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மென்பொருள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதனால் பிரதிகளைப் பெற்றுகொள்ளல் குறைவடைந்துள்ளது.	வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஏ)	ரூபா 101.14 மில்லியன் செலவு செய்து Oracle - 19c கணனி மென்பொருள் அனுமதிப்பத்திரத்தினை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தேசிய	2024 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க தேசிய போட்டி விலைகோரல்களின் கீழ் இவ்வாறான பெறுகைகள் மேற்கொள்ளப்படும்.	பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	போட்டி பெறுகை முறைமை பின்பற்றப்படாது பதிவுசெய்த வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரியதன் காரணமாக ரூபா 26.3 மில்லியன் மிகையாகச் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.		
(ஐ)	மருந்துகள் முகாமைத்துவ கையேட்டின் 05 ஆம் அத்தியாயத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் காலத்திற்கு போதியளவான இருப்புக்கள் பேணப்பட வேண்டிய போதிலும் தரைப்படையினால் 2024 ஆம் ஆண்டின் போது பெறுகைகளின் மூலம் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட 1629 மருந்துகள் மற்றும் அலங்கார பொருள் இருப்பு 2024 நவம்பர் 20 ஆந் திகதி வரை பூச்சியமாகக் காணப்பட்து.	நிதி எற்பாடு போதியதாக இல்லாததனால் வருடந்த மதிப்பீட்டில் 50 சதவீதத்தினை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மருந்துகளையும் அலங்காரப் பொருட்களையும் பெறுகை செய்தல் வேண்டும்.
(ஒ)	இராணுவமற்ற கற்கை நெறிகளுக்காக தரைப்படையினால் வழங்கபப்ட்டுள்ள ரூபா 35.99 மில்லியன் (60 சதவீதம்) பணம் அக்கற்கை நெறியை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இன்னும் ரூபா 24.27 மில்லியன அறவீடு செய்ய வேண்டியுளள்து.	துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைவர் செயற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் வெளிக்கள கடமைகளுக்காக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் அல்லது முப்படைகளின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தலாம் என காட்டப்பட்டிருந்தும் ஆயுதப்படையின் 15 உத்தியோகத்தர்கள்	வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலகளுக்கு முரணாக கடமைகளுக்கு இணைத்துக்கொள்ளப்படாதி ருப்பதற்கும் ஏனைய கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் அமைச்சு அங்கீகாரம் தொடர்பாக விசாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.	உரிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வெளிக்களமற்ற கடமைகளுககாக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகததர்களுக்காக மீளாய்வாண்டில் 21,520 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.		
(ஔ)	2023 யூலை மாதத்திலிருந்து 2024 யூன் மாதம் வரை தரைப்படையினால் மின்சாரப்பட்டியல்களை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செலுத்தாமையின் காணரமாக ரூபா 9.58 மில்லியன் மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது.	எதிர்காலத்தில் தாமதமின்றி பெற்று செலுத்துதவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விலைப்பட்டில்களை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
உள்நாட்டில் மின்சாரத்தை தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்தல், வினைத்திறனாக மருத்துவ சேவையை பேணுதல், தரைப்படையை உள்ளடக்கும் வகையில் பரவுகின்ற/ பரவாத நோய்கள் தொடர்பாக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், ஜயசிங்ஹபுர பாதுகாப்பு மண் அணை, வெடிபொருள் களஞ்சியத்தை சுற்றி மண் நிரப்புதல் மற்றும் உள்ளக வீதி முறைமையை தயார்படுத்துதல், 278.62 ஏக்கர் அளவிலான காட்டுப்பிரதேசத்தை வெளியாக்குதல் மற்றும் வாகன விபத்துக்களின் மூலம் நாளாந்தம் இடம்பெறும் உயிர் மற்றும் ஆதன பாதிப்புக்களை குறைப்பதற்காக தெளிவுபடுத்தும் விரிவுரைகளை நடாத்துதல் ஆகிய இலக்குகளை மீளாய்வாண்டின் போது அடைந்துகொள்ளல் 50 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	சில குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குரிய செயற்திட்டங்கள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது எனவும் சில செயற்திட்டங்களை அமுலப்படுத்தும் போது கால தாமதம் காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கிறேன்.	நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. மனிதவளங்கள் முகாமைத:துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	தரைப்படை ஆளணியின் 59,761 வெற்றிடங்கள் மற்றும் சிவில் ஆளணியில் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம், ஆரம்ப மட்டங்களின் 2,936 வெற்றிடங்கள் ஆக ஒட்டுமொத்தமாக 62,697 வெற்றிடங்கள் காணப்பட்டன.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க பதவிகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளபடியான ஆளணிக்கு பொருந்தும் வகையில் ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2021 மே 20 ஆந் திகதியிலருந்து சிவில் நிருவாக பணிப்பாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் இதற்காக ஒரு நிரந்தர உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய வெற்றிடங்களை துரிதமாக பூரணப்படுத்துதல் வேண்டும்.
(இ)	2016 யூன் 24 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் சிவில் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சுதந்திரமான ஒரு உள்ளக கணக்காய்வு பிரிவு 2017 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் அதற்காக போதியளவு ஆளணியினரும் சுயாதீனமும் வழங்குவதன் மூலம் அரசாங்க கணக்குகள் குழுவின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் இயலுமை காணப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	போதியளவு ஆளணியரை நியமிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	அரசாங்க கணக்குகள் குழுவின் விருப்பினை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.